(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. பி.ஜி. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீய சக்திகளுக்கு அஞ்சாமல், ஊழல், தீவிரவாதம் மற்றும் குடும்ப ஆதிக்க அரசியல், இவற்றை வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்திக் காட்டிய பேராற்றலும், வல்லமையும் படைத்த ஏற்றமிகு தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 101 முதல் 115 வரையிலான 15 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014–2015 ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–45

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எங்கள் குலதெய்வம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மானியக் கோரிக்கையைத் தாக்கல் செய்கிறேன்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.*